செ.வெ.எண்:32 நாள்:19.01.2018

# அரியலூரில் நடைபெற்ற பள்ளிக்கல்வித்திருவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் பரிசுகளை வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளி அரங்கில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் மாவட்ட அளவிலான பள்ளிக் கலைத்திருவிழா மாணவ, மாணவியர்களுக்கு பரிசளிப்பு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (19.01.2018) நடைபெற்றது.

ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.ராமஜெயலிங்கம்** அவர்கள் முன்னிலை வகித்தார்.

இவ்விழாவில், பள்ளி கலைத்திருவிழாவையொட்டி மாணவ, மாணவியர்களுக்கு நடைபெற்ற இசைப்போட்டி, இசைக் கருவி வாசித்தல், ஓவியப்போட்டி, பரத நாட்டியம், பானை ஓவியம், திருக்குறள், டிரம்ஸ் வாசித்தல், ஓவியம், வில்லுப்பாட்டு, கட்டுரைப்போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும், தெலுங்கானா மாநிலம் வாரங்கன் என்ற இடத்தில் நடைபெற்ற 63வது தேசிய பூபந்து போட்டியில் பங்குபெற்ற பொன்பரப்பி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் தமிழ்நாடு அணியில் தேர்வு பெற்றமைக்காகவும், அறிவியில் கண்காட்சியில் மாவட்ட அளவில் முதலிடமும், தென்னிந்திய அளவில் நான்காம் இடமும் பெற்ற மான்போர்ட் பள்ளி மாணவருக்கும் பரிசுகள் மற்றும் சான்றிதழ்களையும், தமிழக அரசின் சார்பில் அரியலூர் அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளியைச் சேர்ந்த நான்கு மாணவியர்களுக்கு சாதிச்சான்று, இருப்பிடச்சான்று, வருமானச்சான்று ஆகிய மூவகை சான்றுகளையும், கோவிந்தபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி தமிழக அரசின் காமாராஜர் விருது மற்றும் ரூ.1 இலட்சத்திற்கான காசோலையினையும், தளவாய் அரசு உயர்நிலைப்பள்ளி காமராஜர் விருது மற்றும் ரூ.75,000/-க்கான காசோலையினையும் மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் வழங்கி பேசியதாவது :-

தமிழகத்திலுள்ள மாணவர்களின் வளர்ச்சிக்காகவும், கிராமப்புற மாணவர்களின் உயர்வுக்காகவும் மாண்புமிகு அம்மா அவர்களின் சிறப்பானத் திட்டத்தின்படி, வருடத்திற்கு ரூ.27,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார்கள்.

விலையில்லா வண்ணச் சீருடைகள், விலையில்லா மிதிவண்டிகள், விலையில்லா மடிக்கணினிகள், விலையில்லா பாடப்புத்தகங்கள், நோட்டுகள், வண்ணக் கலர் பென்சில்கள் போன்ற ஏராளமான நலத்திட்ட உதவிகளை மாணவ, மாணவியர்களுக்காக வழங்கி தமிழகத்தை மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

இந்த திட்டங்களை பயன்படுத்திக்கொண்டு மாணவ, மாணவியர்கள் தங்களுடைய வாழ்க்கையில் முன்னேற்றமடைய வாழ்த்துகிறேன். மேலும், கலைத்திருவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற அனைத்து மாணவ, மாணவியர்களையும் பாராட்டுகிறேன். மாணவர்கள் அனைவரும் தங்களது தனித்திறமைகளை வளர்த்துக்கொண்டு கல்வியில் முன்னேற்றமடைய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர்.அ.புகழேந்தி அனைவரையும் வரவேற்றினார்.

முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றுமு பயிற்சி நிறுவனம் முனைவர்.எஸ்.மொழியரசி, மாவட்ட கல்வி அலுவலர்கள் எஸ்.செல்வம் (அரியலூர்), டி.விஜயலெட்சுமி (உடையார்பாளையம்), மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் முடியழகன், அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் ஆர்.சின்னதுரை, பள்ளித்துணை ஆய்வாளர் ஆர்.பழனிசாமி, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் ஓ.பி.சங்கர், சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் டி.கொளஞ்சிநாதன் மற்றும் ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள், அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

முடிவில், முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் (மேல்நிலை) ஆர்.பொய்யாமொழி நன்றி கூறினார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**